★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1959 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 மார்கழி 8 ரபி. அவ் 17 இதழ் 311
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23 12 83

## "தமிழ் மக்கள் உரிமைபெற்ற ஆண்டாக 1984 மலரவேண்டும்" சபையில் 'இராசு'

(இ. கந்தசாமி)

''தமிழ் மக்களின் சகல உரிமைகளும் வழங்கப்பட்ட ஆண்டாகவும் இனங்களுக்கிடையே ஒற்றுமை ஆண்டாகவும் 1984 ஆம் ஆண்டைப் பிரகடனம் செய்யவேண்டும்' என்று பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தனது அமைச்சுக்கான விவாதத்துக்கு பதிலளித்துப் பேசுகையில் ஜனாதிபதியிடம் இந்தவேண்டுகோளை விடுத்த அமைச்சர், 'நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த தேசியப் பிரச்சினை தீரக்கூடிய அறிகுறிகள் தோன்றியுள்ளதை உணரக்கூடியதாக இருக்கிறது' என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் திரு. இராசதுரை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இன்று விடிந்த காலைப் பொழுது இந்த நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருந்தது. சுமுக சூழ்நிலை பிறக்கக்கூடிய நம்பிக்கையை இன்றைய காலைப் பொழுது சகல மக்களுக்கும் ஏற்படுத்தியது.

'புதிய எதிர்க்கட்சித் தலைவர் விவாதத்தை ஆரம்பித்து வைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். அவர் பல நல்ல யோசனைகளை கூறியிருக்கிறார், அவரது யோசனைகள் எதிர்காலத்தில் எனது பணிகளைத் திறம்பட நடத்துவதற்கு உறுதியைத் தந்திருக்கிறது.

(8ம் பக்கம் பார்க்க)

# கூட்டணி முக்கிய தலைவர்கள்

# இரண்டு வாரத்தில் நாடு திரும்புவார்கள்

## அரசியல்குழு சென்னையில் நாளை கூடுகிறது

### பொதுச்சபைக் கூட்டம் ஜனவரி முதல்வாரத்தில் கொழும்பில் நடைபெறும்

(கே. ஜி. எம்.)

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான சர்வகட்சி மகாநாட்டுக்கு, நிபந்தனை எதுவுமில்லாமல் தமிழர் விடுதலைக் கூட்டணி அழைக்கப்பட்டிருப்பது குறித்து கூட்டணி வட்டாரங்களில் பொதுவான வரவேற்புக் கிடைத்துள்ளது. அதே நேரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பூர்வாங்க மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து ஆராயும் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு நாளை சென்னையில் கூடுகிறது. பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்பில் நடைபெறும்.

அடுத்த மாதம் பத்தாம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் சர்வகட்சி மகாநாட்டிற்கு தமிழர் விடுதலை கூட்டணி எவ்வித நிபந்தனையுமின்றி அழைக்கப்பட்டிருப்பது குறித்து கூட்டணித்தலைவர்களுடன் நேற்றுத் தொடர்பு கொண்ட போது பொதுவாக வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது.

### 'ஆலால்' கருத்து

கோப்பாய் எம். பி.யும். தமிழர் விடுதலை கூட்டணி நிர்வாகச் செயலாளருமான திரு. மு. ஆலாலசுந்தரத்துடன் தொடர்பு கொண்டு கருத்துக் கேட்டபோது சர்வகட்சி மகாநாட்டுக்கு நிபந்தனை இல்லாமல் கூட்டணி அழைக்கப் பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க அரசியல் கட்சிகள் தமது பங்களிப்பை வழங்க முன் வந்தது போல ஏற்கக் கூடிய அம்சங்களை வரவேற்பதில், ஏனைய கட்சிகள்போல் கூட்டணியும் தனது பங்களிப்பை அளிக்கும்' என்றார்.

இதே நேரத்தில் சென்னையிலிருந்து நேற்று கிடைத்த தகவல்களின்படி, தமிழர் விடுதலை கூட்டணியின் அரசியல் குழு நாளை சென்னையில் கூடி, பூர்வாங்க மகாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கும் முடிவு குறித்து விரிவாக ஆராயவிருப்பதாகத் தெரிய வருகிறது.

அதே நேரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் பூர்வாங்கமகாநாட்டில் எடுக்கபட்ட தீர்மானமும், கூட்டணிக்கு விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பும் உத்தியோகபூர்வமாக இந்தியப் பிரதமரின் சிறப்புத்தூதுவர் திரு. ஜி பார்த்தசாரதி மூலமாக கூட்டணிக்கு வழங்கப்படும் என்று அறியப்படுகிறது.

[8-ம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் கடும் மழை 20,000 குடும்பங்கள் பாதிப்பு

(மன்னார்)

மன்னாரில் பெய்துவரும் கடும் மழை காரணமாக 20 சிறிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

இதனால் 20,000 க்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நிவாரண வேலைகளை ஆரம்பிக்குமாறு மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகளுக்குஉத்தரவிட்டுள்ளார். (வெ)

## காலநிலை இன்று சீராகும்

[கொழும்பு]

பவன அமுக்கம் யாழ்ப்பாணம் நோக்கி நகர்ந்துள்ளதாக வளிமண்டலத்திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தப் பவன அமுக்கம் பின்னர் சென்னை நோக்கி நகருமென்று தெரிவிக்கப்பட்டது.

வடபகுதியில் பலத்தகாற்று வீசும் அபாயம் நீங்கிவிட்டதென்றும், தொடர்ந்தும் மழைபெய்யுமென்றும் கடல் கொந்தளிக்குமென்றும் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் காலநிலை இன்று சீராகுமென்றும் தெரிவிக்கப்பட்டது

காங்கேசன்துறையில் 131 மில்லிமீற்றர் மழையும், முல்லைத்தீவில் 119 மில்லி மீற்றர் மழையும் நேற்றுப் பெய்ததாக வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. (வெ)

## புயல் அபாயம்!

சென்னை, டிச. 22

தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளில் புயல்

(8ம்பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் வெள்ள நிலைமை

### பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பார்சல்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கியிருப்போர்களுக்கு, உணவுப் பார்சல்கள் வழங்க சமூக சேவைப்பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதியில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் இன்னும் வந்துசேரவில்லையென்றும், அது வந்து சேர்ந்ததும் அவர்களுக்குவேண்டிய உதவிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வெள்ள நிலைமைபற்றி அரசாங்க அதிபர் நேற்று சமூக சேவைப்பகுதியினர், உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

கந்தர்மடம் பகுதியிலும், சில குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ வி கே. சிவஞானம் நேற்று யாழ். நகரத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை, ஊழியர்களுடன் சென்று பார்வையிட்டு, உடனுக்குடன் வெள்ளத்தை ஓடச் செய்வதற்கு நடவடிக்கையெடுத்தார்.

ஆரியகுளம், பொம்மைவெளி, முஸ்லிம் பகுதி ஆகியவை அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதால், மக்கள் வெளியேறிவிட்டனர்

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ்மொழியை அமுலாக்கியிருந்தால் கலவரம் நிகழ்ந்திராது!

### எதிர்க்கட்சித் தலைவர் அநுரா கண்டனம்

(கொழும்பு)

உரியமுறையில் தமிழ்மொழி அமுலாக்கல நடைமுறைப் படுத்தி இருந்தால் ஜுலைக் கலவரம் நிகழ்ந்திருக்காது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராபண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதிஒதுக்கீடு பிரான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறிய அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

''தமிழ் அமைச்சர் ஒருவரால் தமிழ்மொழியை அமுல்படுத்த முடியாவிட்டால் சிங்கள அமைச்சரால் எப்படி முடியும்?

''தமிழ்மொழி அமுலாக்கலுக்கு பொறுப்பான பிரதேச அபிவிருத்தி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என மற்றொரு தமிழ்அமைச்சரான தேவநாயகம் கூறியுள்ளார். இதுவே இனக்கலவரத்துக்கு காரணம் என ஜுலைக் கலவரத்துக்குப் பின்னர் பாராளுமன்றம் கூடியபோது பேசிய அவர் கூறினார். அமைச்சரவையிலும் இதுகுறித்து ஆராயப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நான்கு அறைகள் கொண்ட வீடு ஒன்று சகலவசதிகளுடன் விற்பனைக்குண்டு. 10/7, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. 10613

கொழும்புத்துறை மேற்கு காணி 3 பரப்பு கூடிய கேள்விக்கு விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10695 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10695

புத்தம் புதிய National 20'' டெலிவிஷன் கறுப்பு வெள்ளை Antenna Booster, Wire மற்றும் சொந்தப்பாவிப்பிலிருந்த Grundig 14'' சுப்பர் கலர் டெலிவிஷன். கபினற்மொடல் சிங்கர்மெஷின். Cameras, Citizen Choronograph கைக்கடிகாரம் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். யஸ்ரின் பஸ்தியாம்பிள்ளை, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 10684

எனது சொந்தப் பாவிப்பிலுள்ளவான் இல No. CV 4100 A 40 பேகுசன் ரக்ரரும், அதன் பெட்டியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும். சிறிசேன, லீலா பேக்கறி, கண்டி றோட், கச்சேரி. 10701

## தேவை

பளை, தென்னந்தோட்டத்திற்கு ஒரு கணக்கர் தேவை. சம்பள விபரம் நேரில், முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:- 10696 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10696

விற்பனையாளராகப் பணிபுரிய படித்த மாணவன் தேவை. நற்சான்றுப்பத்திரத்துடன் தொடர்புகொள்ளவும். யாழ். முனிசிப்பல் எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஞானசுரபி புத்தகக்கம்பனி, 217, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 10686

யாழ். பட்டின மத்தியில் D. A. M. ஒருவருடன் Working பாட்னராகதொழில் தொடங்குவதற்கு R. M. P. ஒருவர் தேவைப் படுகிறார். விபரமாக எழுதவும். விளம்பர இல. 10700, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10700

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

யாழ். நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதியதமிழ்ப்படங்கள் வெளிவந்துள்ளன. உங்களை அங்கத்தவராக்கிக்கொள்ளுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10593

## வகுப்புகள்

பௌதிக இரசாயனம் ஆரம்பம் 23-12-83 காலை 10 மணி. ஆசிரியர் திரு. க. இளவழகனார். A/L 84/85. தொடர்பு கொள்க. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையாச் செட்டியார் லேன், யாழ்ப்பாணம். (10677)

## வாடகைக்கு

யாழ். நகரத்தின் மத்தியில் டியூட்டரி, கல்லூரி மாணவிகளுக்கு சகல வசதிகளும் உள்ள அறைகள் உண்டு. பார்வையிடவும். உணவு வசதி செய்து தரப்படும். 50, பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 10699

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவர் பதவி
(தற்காலிகம்)

இம்மன்றத்தின் மராமத்துப் பகுதியில் கட்டாக்காலிக் கால்நடைகள் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 12 - 83

ஒரு மாடு பிடித்தற்கான கூலி: ரூ. 20-00

ஒரு ஆடு பிடித்தற்கான கூலி: ரூ. 12-50

மேலதிக விபரங்கட்கு மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16 - 12 - 83. 10692

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### ஆதனவரி அறிவித்தல்

1983ம் ஆண்டு 4ம்காலாண்டுக்குரிய ஆதனவரியை 30-12-83ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பு இக்காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத்திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன் வசிப்பிடவளவுகளுக்கும், வெற்றுக்காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%), ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20 %) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக் காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச்சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

1984ம் ஆண்டுக்கான ஆதனவரியை முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு 10% கழிவு வழங்கப்படுமென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
20-12-1983. 10704

## FOR SALE

Used Myford Supper 7 South Bend Lathe's, Plastice injector machine, Strip cutter and various machinery tools. 392, Navalar Road, Nallur. 10697

## WANTED

Leading Jaffna Firm requires a middle aged male clerk with typing and workshop management experience. Cash security essential. Please apply in own handwriting with copies of recent testimonials, stating salary expected to 484, Hospital Road, Jaffna. Do not call personally, 10689

### யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்
### பதவி வெற்றிடம்
**கணக்காளர்**

மேற்குறித்த பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறைந்த பட்ச
.......................
தகுதித் தகைமைகள்
.......................

பட்டயக் கணக்கறிஞர் தகுதிச் சான்று நிலை அல்லது செலவின முகாமைக் கணக்காளர் தகுதி நிலையின் பகுதி 1 அல்லது ஏ. சி. சி. ஏ பகுதி 1 அல்லது கணக்கியல் டிப்பிளோமா.

அனுபவம்:
...............

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் பெற்றுள்ள அனுபவம். எத்தனை வருட அனுபவம் என்பதைக் குறிப்பிடவும்.

வயதெல்லை:
...............

01 - 12 - 1983-ல் 30 ற்கும் 50 க்கும் இடையில்,

சம்பளம்:
............ 1500 ...... 2000
.......................
50 X 10

(படிகள் தவிர்ந்தது)

கல்வி, தகுதித்தகைமைகள், காலம் குறித்த அனுபவ விபரங்கள் ஆகியன உட்பட விண்ணப்பங்கள் பூரணமாகத் தயாரிக்கப்பட்டு 07 - 01 - 84 அன்று அல்லது அதற்கு முன்னராகச் சங்கத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதியும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 10687

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### பகிரங்க ஏல விற்பனவு
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல: காசு/1235

மேற்படி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பற்றாணையினால் பதிவாளரும் பிஸ்கால் அதிகாரியும் ஆகிய குமாரவேலு குலசிங்கம் ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு இவ்வழக்கு சம்பந்தமாகக் கைப்பற்றப்பட்ட 27ஸ்ரீ1730-ம் இலக்கம்கொண்ட இசுசு 150 டீசல் 'வான்' என்னும் வாகனத்தை 1984-ம் ஆண்டு தை மாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனவு செய்து மேற்கூறிய வழக்காளிக்கு உரிய வட்டி முதல், வழக்குச்செலவு மற்றும் செலவுகள் யாவும் அறவிட்டுக்கொள்ளப்படும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

1983-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்,
பிஸ்கால் அதிகாரி.

(10702)

### Diploma in Draughtsmanship

COMMENCING ANOTHER NEW GROUP AT JASE INSTITUTES ON 01-01-1984.

DURATION:- 7 Months (300 hours)
Week end classes.

Six Subjects - ENGLISH medium (with special coaching in Language).

Lectures and instructions by QUALIFIED and EXPERIENCED TUTORS

Comparatively HIGH Standards and LOW Rates

THE SUCCESSFULL COMPLETIONS OF THIS COURSE HELPS TO FIND AN EMPLOYMENT EASILY

Also commencing on 02-01-1984.

### Basic Course in Building Construction

(WEEKDAYS—EVENINGS)

For further Details and Enrolmennts Contact (During Saturday / Sundays)

The DIRECTOR—JASE INSTITUTES,
TRIMERHALL—21/6, Vembadi Road, Jaffna.

### வெற்றிடங்கள்
### வைத்தியசாலை - சவூதி அரேபியா

1. பெண் தொழிலாளிகள் (Female Hospital Cleaners) வயது 25—38 வரை.
2. ஆண் தொழிலாளிகள் (Male Hospital Cleaners) வயது 28—40 வரை.
3. சாரதி (AMBULANCE)
4. சாரதி (CAR)

ஆங்கில அறிவு இருத்தல் வேண்டும்

இலவசம்: சாப்பாடு, தங்குமிட வசதி, இருவழி விமானச் சீட்டு.

இருவருட ஒப்பந்தம்.

காலை 9 — 12 மணிக்கும் மாலை 3 — 5 மணிக்கும் இடையில் நற்சாட்சிப்பத்திரங்களுடன் எமது யாழ்ப்பாண ஏஜெண்டை உடன் சந்திக்கவும். (நத்தார் விடுமுறை தவிர).

முத்தையா இராசசிங்கம்
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

**Construction & Development & Co. Ltd.**
**Nugegoda.**

Labour Licence No: 96.
Approval No: FE/6/FEA/98/4400.

(10683)

கிறிஸ்மஸ் சலுகை!!

## எலற் ரெலிவிஷன்

விலை 2750/00

பூஸ்டர், அன்ரனா, வயர் இலவசம்.

24-12-83 வரை மட்டுமே இச்சலுகை

## நியூசிற்றி றேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம். — போன்: 24055

## அணு ஆயுதத்தை தவிர்க்குமாறு

# சோவியத், அமெரிக்காவுக்கு

# ஐ. நா. செயலாளர் கோரிக்கை

நியூயோர்க், டிச. 22

உலகில் அணு ஆயுத யுத்தமொன்று ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளுமாறு சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிடமும் ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ் டி கொய்லர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சோவியத் அதிபர் யூரி அந்ரபோவ், அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் ஆகியோர் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுவார்த்தைநடத்த வேண்டுமென்றும் ஐ. நா. செயலாளர் இரு தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"உலகில் இத்தகையவொரு பயங்கரயுத்தம் ஏற்படும் பட்சத்தில் அதனால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானவை. குறிப்பாக முழு உலகுமே இதனால் அழியவேண்டியதொரு நிலை ஏற்படும். இத்தகைய யுத்தமொன்று ஏற்படாது இந்த இரு நாடுகளும் பார்த்துக்கொள்ள வேண்டு" மென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சூ)

## சரோஜினி வரதப்பன் 'சென்னைஷெரிப்'

(சென்னை)

சென்னை மாநகர 'ஷெரீப்' ஆக திருமதி சரோஜினி வரதப்பன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று தமிழக ஆளுநர் திரு. எல். எம் குரானா முன்னிலையில் சத்தியப்பிரமாணம்செய்து தமது இப் புதிய பதவியைப் பெற்றுக் கொண்டார்,

திருமதி சரோஜினி வரதப்பன் சிறந்தபேச்சாளரும் சமூக சேவகியுமாவர் இவரின் சேவைகளைப் பாராட்டும் விதத்திலேயே இந்த 'ஷெரீப்' கௌரவம்இவருக்குவழங்கப்பட்டது.

'ஷெரீப்' ஒரு கௌரவப் பட்டமாகும். சென்னை நகரில் கலை மற்றும் சமூக சேவைகளில் நாட்டம் கொண்டவர்களுக்கு கௌரவமளிக்கும் வகையில் தமிழக அரசின் சிபார்சின்கீழ் ஆளுநரால் இப் பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறது. (கி)


## வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

**மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154


# "எந்தவொரு நாட்டையும் இந்தியா ஆக்கிரமிக்காது!"

## பயமுறுத்தலுக்கும் அடிபணியாது என்கிறார் இந்திரா

பம்பாய், டிச. 22

"இந்தியா மிகப் பெரிய நாடாக இருந்தபோதிலும் உலகில் எந்தவொரு நாட்டையும் ஆக்கிரமிக்கவில்லை. எதிர்காலத்திலும் எந்தவொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டாது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி உறுதியளித்துள்ளார்.

பம்பாய் வார ஏடொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் அவர்இதனைத் தெரிவித்துள்ளபிரதமர், இந்தியாஎல்லா நாடுகளுடனும் குறிப்பாக அயல்நாடுகளுடன் நெருக்கமான உறவுகளையே ஏற்படுத்த விரும்புகிறது. ஆயினும் இந்தியாவின் இந்த நல்லெண்ணத்தை யாரும் பலவீனமாகக் கருதக்கூடாது என்றும் தெரிவித்தார்.

அண்டை நாடான பாகிஸ்தான் போருக்கு ஆயத்தம்செய்கிறதுபோல் தெரிகிறது. இந்தியா மீது மேற்கொள்ளப்படும் எந்த ஆக்கிரமிப்புக்கும் தகுந்த பதிலடி கொடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ள அவர், குறிப்பாக இந்தியா எந்த நாட்டினையும் ஆக்கிரமிக்காது. அதேவேளை எந்தவொரு நாட்டின் ஆக்கிரமிப்புக்கும் பணிந்து விடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். [சூ]

## ஸெயில்சிங் பாஹ்ரெய்ன் விஜயம்

பாஹ்ரெய்ன், டிச. 22

இந்திய ஜனாதிபதி ஜானி ஸெயில்சிங் நேற்று முன்தினம் பாஹ்ரெய்ன் மன்னரையும் மற்றும் தலைவர்களையும் சந்தித்து இரு தரப்பு உறவுகள், சர்வதேசப் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரு நாடுகளுக்குமிடையில் இருந்துவரும் நெருக்கமான உறவு தொடர்ந்து பேணப்படவேண்டுமென்பதில் இரு நாட்டுத் தலைவர்களும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர்.

சர்வதேசப் பிரச்சினைகளில் குறிப்பாக மேற்காசியாபற்றிய விடயத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் கூடுதல் அக்கறை

(6-ம் கலம் பார்க்க)


## ஹோம் பிரின்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிரின்ஸ் லிமிட்.
   இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24810
2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
   இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23596
3. நியூ ப்ரசீதா
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிரின்ஸ் லிமிட்.
   463, காலி வீதி,
   கொழும்பு-3
   தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 23277



# விவசாயிகளே!

உங்கள் காய்கறி வகைகள், புகையிலை, தோடை, திராட்சை, எலுமிச்சை, மிளகாய் போன்றவற்றில் பூஞ்சண நோய்களா? இன்றே பாவியுங்கள் சிறந்த பாயர் தயாரிப்புகளில் ஒன்றான

# அன்றக்கோல் 70%

100 கி - 15/50 500 கி - 62/50 1 கி. கி - 120/-

இவை உருளைக்கிழங்கு, தக்காளி போன்றவற்றில் முன், மின் வெளிறல் நோய்களை, நிலக்கடலையில் இலைப்புள்ளி நோய், வெண்காயத்தில் இலைவாடல் நோய் போன்றவற்றை அதி சிறப்பாக கட்டுப்படுத்தும்

தயாரிப்பாளர்:

# ஹேகெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10

உங்கள் விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜென்சீஸ், பலாலி ரோட், யாழ்ப்பாணம்
'பாயர்' அக்ரோ கெமிக்கல்ஸ், கிளிநொச்சி
குளோப் ரேடர்ஸ், வவுனியா
M. K. M. அக்பார், அயின் தியேட்டர், மன்னார்

### மணிவாக்கு

மனிதர்கள் பால் பகைகொண்டு இறைவனுக்கு
மடிநிறையக் காணிக்கை செலுத்திஎன்ன
புனிதனெனப் பகைவனையும் உறவாய்ச்செய்து
புண்ணியத்தைச் செலுத்திக்கொள் பிறகே கோவில்!

—இயேசு காவியம்

## நமது நோக்கு

# முகாம்கள் மூடுவிழா?

எந்த விழாவுக்கும் கொடியேற்றம் உண்டானால் கொடியிறக்கம் கட்டாயமானதே. ஆனால் அருள்பாலிப்பின் முடிவே அது.

இம்மாத முடிவுடன், இந்த அநியாய வருட முடிவுடன், அகதிகள் முகாம்களை மூடிவிட அரசு தீர்மானித்துள்ளது.

ஆடிக்கலவரத்தின் கொடுமை அகதிகளுக்கு அளிக்கப்பட்ட முகாம்களில் அவர்களுக்குத் துரிதமாக வழங்கப்பட்ட நிவாரண சேவையால் ஓரளவிற்குச் சாந்தப்படுத்தப்பட்டது.

இத் திறமைக்கு, இப் பாரியதிட்டத்துக்குத்தலைமை தாங்கிய திரு பிறட்மன் வீரக்கோனைநாம் ஏற்கனவே பாராட்டியுள்ளோம். அவரின் அசாதாரண ஆளுமை அரசின் கண்டிப்பான கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டதேனும், எதிர்பாராத நெருக்கடியில் எழுந்த பல துன்பங்களையும், அவை ஏற்படுத்திய சிக்கல்களையும் சீர்படுத்திய பெருமை அவருக்கே உரியது.

நாம் இன்று அரசைப் பொதுவாகவும் திரு. பிறட்மனைச் சிறப்பாகவும் கேட்கும் கேள்வி: நாட்டின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்கள் எல்லாம் ஒரேநாளில் மூடப்படுவது இந்த அவசிய நிவாரண சேவைக்கு நியாயமான முடிவா?

எந்த நிலையில் இன்று இவ்வித நிவாரணவேலை இருப்பதென்பதை நாம் தெளிவாக அறிய முடியவில்லை; இருப்பினும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட இரு முகாம்களை ஆதாரமாகக் கொண்டால், தொடர்ந்து உதவி பெற வேண்டிய அனாதை மக்கள்-ஆண் பெண் குழந்தைகள்-இன்னும்பலர்- ஆயிரக்கணக்கில் உண்டென்று அஞ்சவேண்டியிருக்கிறது.

இந்த விடயத்தில் அகதிகளாக்கப்பட்ட, அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியர்களையும்- குறிப்பாக ஆசிரியர்களையும் கவனித்துக்குறிப்பிடவேண்டும்.

இவர்களுக்குபுனரமைப்பு என்றால், அரசின் நிதியை அறவும் பாதிக்காத வண்ணம், அதேசமயம் இந்தக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த நாட்டு மக்களென்று எவ்வித பாகுபாடும் காட்டாது, பகைமையை ஒழிக்க நல்லதொரு சந்தர்ப்பம் உண்டு.

அமைச்சர்களின் தூர நோக்கு நாட்டுக்கு நாம் இன்று வருந்தியழைக்கும் இன ஒற்றுமைக்கு பெரிதும் உதவும்; அது மட்டும் போதாது.

நிர்வாகத்திமிர் கடந்த காலத்தில் ஆட்சிகளின் நியாயமான கொள்கைகளையே அலட்சியம் செய்து செயற்படுத்தத் தடையாயிருந்தது. தமிழ் மக்களுக்கு என்ன சலுகையென்ற போக்கில் சில அரச திணைக்களங்கள் தான் தோன்றித்தனமாய் நடந்தமை அமைச்சர்களுக்கும், ஜனாதிபதிக்கும் கரையற்பாடம்.

எனவே ஒருபுதுவிதமான அனுதாப நோக்குடனும்; இயன்றளவிற்கு பொறுமையுடனும் தெளிவான கொள்கைகளை திறம்படச் செயற்படுத்த வேண்டியது இன்றைய நிலையில் அவசரமானது.

இருபது வருடசேவை புரிந்தவர் 45 வயதுக்கு மேற்பட்டவரை ஓய்வு பெற அனுமதித்தல்; இயன்றளவிற்கு தகைமை அடிப்படையில் சேவையிலுள்ளவர்களுக்கு வடக்கிலும் கிழக்கிலும் இடமாற்றமளித்தல். இவ்விரு கொள்கைகள் கொண்ட பரந்த அடிப்படையில் பலருக்கு உதவிவழங்க முடியுமானால், எல்லோருக்கு ஆட்சியில் நம்பிக்கை ஏற்படுத்த பெரிதும் உதவுமென்பது தெட்டத்தெளிவு. ஆட்சி இன்று நடத்தும் ஆலோசனைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இது அச்சவாரமாக அமையும்.

நாம் குறிப்பாக எடுத்துக்கொண்ட கூட்டத்தினர் ஒன்றுமில்லாதவர்; ஆருமற்றவர்; எவ்விதபாதுகாப்புமற்றவர்; பெரும் பாலும் மலையகத் தோட்டங்களிலும் மற்றுமிடங்களிலுமிருந்து உயிரைப் பாதுகாக்க வடக்கே ஓடிவந்தவர்கள்.

இவர்களை, இவர்களைப் போன்ற உண்மையான அகதிகளை புதுவருட முதலாம் தேதியில் தெருவில் விடலாமா? அரசு எடுக்கும் முடிவு மாற்றமுடியாதானால், இந்தநாட்டின் பொது நல சேவைக்கு அணிகலனான றோட்டரி, லயன், சர்வோதய, விஸ்வஇந்து புரிஷத் நிறுவனங்கள் நிச்சயம் நிவாரணத்தில் தொடர வேண்டுமென மிகப்பணிவுடன் வேண்டுகின்றோம்; இது மகேஸ்வரன் சேவை.

தொழில் புரியும் திடமுடைய ஆணோ பெண்ணோ உழைத்து ஊதியம் பெறவும்; வசிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒருதுண்டு நிலமோ இருப்பிடமோ கிடைக்கும் வரையில் இந்த ஏழைகளைப் பாதுகாக்க, யாழ்ப்பாண நிவாரண நிதியம் 1983 உதவ முடியாதா? தொழில் உறைவிடம் அளிப்பதில் அளித்த உறுதியைத் தளரவிடலாகாது.

ஆட்சியின் முடிவுக்கு இவ்வித தொண்டு நிறுவனங்கள் கட்டுப்பட்டவையல்ல, உலகின் பலநாடுகள் ஏராளமான உதவிப் பொருள்களையும் காசையும் நிவாரண உதவியாக வழங்கியிருக்கின்றன. அரசு அதனைச் செவ்வனே பயன் படுத்த இந்தத் தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிதியுடன் சேர்த்து உதவுவதால் கதியற்றவர்களை — சோம்பேறிகளையல்ல — நட்டாற்றில் விடுவது நல்லதல்ல.

# நான் கண்ட வன்னி

ஊவா மகாணத்து உப அரசாங்க அதிபராக கடமையாற்றும்பொழுது உள்நாட்டு அமைச்சின் நிரந்தர செயலாளர் சேர் வேலுப்பிள்ளை குமாரசுவாமி தன்னை கொழும்பில் காணும்படி எழுதியிருந்தார். ஓரளவு எதற்காகவென்று ஊகிக்கக் கூடியதாயிருந்தது ஏனென்றால் சிலகாலமாக வவுனியாவுக்கு என்னை அரசாங்க அதிபராக அனுப்புவதென்று யோசிக்கப்பட்டு வந்தது. சேர் வேலுப்பிள்ளையைகொழும்பில் சந்தித்த பொழுது என்னை வவுனியாவுக்கு அனுப்ப அரசாங்கம் யோசிக்கிறதென்றார். நல்லதென்று நான்கூறினேன் சில நிமிடம் மௌனம். பிறகு சேர்வேலுப்பிள்ளை நான் மிகவும் கஷ்டமான பிரதேசத்திற்கு அனுப்புவதற்கு விருப்பமில்லாமல் கூறதான் என்னென்ன காரணங்கள் கூறவென்று தயாராயிருந்தாரென்றும் இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு சிவில் சேவிஸ் உத்தியோகத்தர் செல்ல மறுப்பது வழக்கமென்றும் இதற்கு எதிர்மாருக நான் சம்மதித்ததால் தனக்கு சொற்ப நேரம் பேசத்தயக்கமாக விருந்ததென்ருர். நான் சில காரணங்களுக்காக இரண்டுமாசம் தவணை கேட்டேன். அதுகொடுக்கப்பட்டது.

இந்த இரண்டுமாசம் வன்னியில் என்ன செய்யவேண்டும். எப்படி செய்யவேண்டுமென்று யோசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது காந்தி அடிகளின் இராமராச்சியம் மனதில் பட்டது. அன்பால் மக்களை கொண்டுநடத்தலாம், நிர்வகிக்கலாமென்று என் மனதில் உதித்தது. ஏது செய்ய வேண்டுமென்று யோசித்த பொழுது மன நம்பிக்கையுடன் போதியவருவாய் பெறும் மக்களாய் வன்னி மக்களை மாற்ற வேண்டுமென்று முடிவெடுத்தேன். நெருக்கடியாக யாழ், குடாநாட்டிலிருக்கும் மக்களை வன்னியில் குடியேற்றவும் யோசித்தேன்.

இரு நாள் கச்சேரியில் வேலை செய்ததும் ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு கச்சேரி ஜீப் (Jeep) வண்டியில் வெளிக்கிட்டு பத்து மணி வரையும் பார்க்கக்கூடிய குளங்களைப் பார்வையிட்டேன். இதேபோல் முல்லைத்தீவில் தங்கி அவ்விடமும் பார்வையிட்டேன். மூன்று நாலு மாசங்களுள் வவனியா மாவட்டத்திலுள்ள 450 குளங்களையும், 400 கிராமங்களையும் பார்வையிட்டு முடித்தேன். நான் பார்க்காத குளமுமில்லை; போகாத கிராமமுமில்லை. மக்களின் தேவைகளைப் பார்வையிட்டு ஆவன செய்துகொண்டு போகும்பொழுது வேலையும் கூடிக்கொண்டே போனது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை வாரத்தில் இருந்ததென்றே தெரியவில்லை. அரசாங்கமே தமிழ் மக்களுக்குச் சேவைசெய்யக் கொடுத்த வாய்ப்பை எவ்வளவு கூடப் பயன்படுத்த முடியுமோ அவ்வளவும் பயன்படுத்தினேன். இதனால் வாரத்திற்கு ஏழு நாட்களும் சந்தோசம் நேரம் பாராமல் வேலைசெய்தால்தான் தொடங்கின கருமங்கள் முடிக்கலாமென்று உதவி ஒத்தாசை கொடுத்த உத்தியோகத்தர்களுடன் கருமங்களைப் பார்த்தேன். ஒரு சம்பவம் இது தொடர்பாக ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு விடுமுறை நாள். எனது நண்பன் அருட்பிரகாசம் புத்தளம் அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் போகும் வழியில் எங்கள் வவனியா வாசஸ்தலத்திற்கு வந்தார். எங்கே நான் என்று விஸவியதும், மனைவியார் கச்சேரியிலென்ருர். எனது நண்பர் இதை வேடிக்கையாகக் கருதினுர். உண்மை தெரிந்ததும் கச்சேரிக்கு வந்தார், பல உத்தியோகத்தருடன் நானும் வேலை செய்ததைக் கண்டு திகைத்துப்போனுர். என்னப்பா செய்கிறீர்களென்ருர். அதற்கு, பல நூற்ருண்டுகளாகத் தேடுவாரில்லா

### நா. மாணிக்க இடைக்காடர்

இடமாற்றத்திற்கு இரண்டு நாள் முந்தியே வவுனியாவுக்கு குடும்பத்துடன் சென்றேன்.

அன்று மாறிப்போகும் அரசாங்க அதிபருக்குபிரியாவிடை இந்தவைபவத்திற்கு என்னையும் அழைத்தார்கள், அந்த சந்தர்ப்பத்தில் பலபேரை சந்தித்தேன். ஆனல் இரு விவசாயிகள் தங்களுக்குள் பேசியது தான் எனக்கு மனதில் பதிந்தது. தேநீர் அருந்தும் பொழுது எனக்கு பின் இருந்த விவசாயி மற்றவருக்கு கூறினுர். மாறிப்போகும் அரசாங்க அதிபரை பார்த்தியாஎவ்வளவு இலட்சணமாக வீற்றிருக்கிருரென்று. இதற்கு உடன் பதில் வரவில்லை. சில நிமிடத்திற்கு பிறகுமற்ற விவசாயி இவருக்கு இதுதான்தெரியும். வேறென்ன இவருக்கு தெரியுமென்ருர். இந்த குறிப்பு ஒருவேத வாக்கியம் போன்றது பொதுமக்களுக்கு உத்தியோகத்தரைப் பற்றி அபிப்பிராயமுண்டு. அநேகமாக இதுவே சரியான அபிப்பிராயம். மாறிப்போகும் அதிபரின் வேலையில் குறையிருப்பதாக பேசியது உண்மையென்று இரண்டுநாளில் தெரிந்தது. என்னிடம் கச்சேரியை பாரம்கொடுக்கும் பொழுது இவர் சொன்னுர் இங்கே ஒரு வேலையும் இல்லை. தான் கச்சேரிக்கு போகும் பொழுது ஒவ்வொருநாளும் ஒரு நாவல் கொண்டுபோய் வாசிப்பதாகவும் ஒருநாளைக்கு நாலு கடுதாசி (File) தான் வருமென்ருர். எனக்குஇது பிடிக்கவில்லை. நாவல் கச்சேரியில் வாசிப்பதற்கு எனக்கு சம்பளம் வாங்கவிருப்பமில்லை.

மல் கவனிக்கப்படாத பகுதியையும் மக்களையும் முன்னேற்றுவதாயின் விடுமுறை பார்க்க முடியாது; அதோடு எவ்வளவு காலம் அரசாங்கம் என்னை வவனியாவில் கடமை செய்ய விடுமோவென்றுதெரியவில்லை ஆகையால் ஒவ்வொரு நிமிஷத்தையும் பயன்படுத்தி ஆக்கபூர்வ வேலைகளைத் துரிதமாகச் செய்கிருமென்றேன்.

வவனியாபோய் இரண்டொரு மாசத்தில் புதுக்குளம் என்ற கிராமத்திற்குச் சென்றேன். அங்கு நாகமுத்து என்ற விவசாயி வன்னியின் வாழ்க்கைக் கஷ்டங்களை ஒரே வரியில் கூறினுர் ''வண்ணான் வந்தாலும் நெல்லைக் கொடுக்கிருேம்; நாவிதனுக்கும் நெல்லு; பிள்ளைகளுக்குப் புத்தகம், உடுபிடவை என்ருல் இதற்கும் நெல்லு வேண்டும்; கடைசியாகச் சாப்பிட நெல்லில்லை''. எனக்கு வன்னி விவசாய மக்களின் பிரச்னை விளங்கிவிட்டது. ஒன்றில் தற்பொழுது கிடைக்கும் நெல்லை மிகவும் அதிகரிக்கவேண்டும்; அல்லது நெல்லை உணவுக்கு வைத்துக்கொண்டு வேறு முயற்சியால் வருவாயைக் கூட்டிக்கொள்ளவேண்டும். இதுதான் சவால்!

இதையிட்டுப் பலமாக யோசித்துக்கொண்டிருந்தேன். அத்தருணத்தில் பின்னேரம் உலாத்தப் போன பொழுது வவனியா பட்டின எல்லைக்குள் ஒரு விவசாயி எருதுகளை உபயோகித்துத் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்ததைக் கவனித்தேன். அந்த விவசாயி

(5ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிச்சிந்தனை

# சரியை

வசிட்ட முனிவர் யாத்திரையாக ஒருமுறை திருவாரூருக்குச்சென்ருர் அங்குகாலம் தோறும் சிவதரிசனம் செய்துகொண்டு சிலகாலம் தங்கியிருந்தார். அக்காலத்தில் பல அன்பர்கள் வசிட்டரை வணங்கியும், அவரது நல்மொழிகளைக் கேட்டும் நன்மையடைந்தனர். ஒருநாள் நான்குபேர் வசிட்டரை அடைந்து வணங்கினர். அவர்கள் தாம் உலக பந்தங்களிலிருந்தும் விடுதலையடைந்து சிவானந்தப் பெருவாழ்வை அடையும் மார்க்கத்தைத் தமக்கு உபதேசிக்கும்படி வேண்டினர். அவர்களது சம்பாஷணைமூலமும்அவர்களது பிறப்பின்சிறப்பினுலும்நான்கு பேரினதும் தகுதியை அறிந்துகொண்ட வசிட்டர் அவர்களுக்கு உரிய உபதேசங்களைச் செய்தார். ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து தினமும் ஆலய வழிபாடு செய்யும் நியமத்தினை ஒருவருக்கும் இடைவிடாது செபம்செய்யும் முறையினையும் மந்திரத்தையும் ஒருவருக்கும். என நான்குபேருக்கும் நாலுவிதமான நெறியினை வசிட்டர் போதித்தார். பின்னர் வசிட்டர் அவர்களுக்கு விடைகொடுத்து ''நீங்கள் உபதேசப்படி நியமமாய் நடந்துகொண்டால் ஆரூரின் அம்மானுகிய சிவன் நால்வருக்கும் ஒரே தினத்தில் காட்சி தந்து அனுக்கிரகம் செய்வார்'' என்று வாழ்த்தி அனுப்பினுர்.

அவர்களும் சென்று வசிட்ட முனிவர் தமக்கு உபதேசித்ததில் சிறிதும் தவறுதல் ஏற்படாதபடி ஆலயவழிபாடு, செபம், தியானம் என்பனவற்றை விசுவாசத்துடன் செய்தனர். திருவாரூர்த்தியாகராசப்பெருமானும் அவர்கள் கடைப்பிடித்தசெயல்களில் ஏற்றத்தாழ்வுகளை பாராட்டாது ஒரேதினத்தில் நான்கு பேருக்கும் தனித்தனியே காட்சி கொடுத்து அவர்கள் விரும்பிய சிவானந்தப் பெருவாழ்வை அருள்புரிந்தார்.

திருவாரூர்த் தியாகராஜா லீலையாகிய இவ்வரலாற்றிலிருந்து சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய வழிபாடுகளின் ஒத்த பெருமையை அறிந்துகொள்ளலாம்.

இக்காலத்தில் பலர் நூல்கள் வாயிலாக ஞானசாதனையின் சிறப்பை அறிந்தும் சரியை கிரியை என்பனவற்றை முற்றுமுழுதாக அலட்சியம் பண்ணிவிடுகின்றனர்.

உண்மை நூல்களாகிய சாஸ்திரங்களையும், யோகம், ஞானம் ஆகியவற்றின் பெருமைகளையும், ஒருவரின் மனப்பக்குவமும் சமய ஒழுக்கமுமாகிய தகுதிகண்டே உபதேசிக்க வேண்டும் என்பதும், ஞானசாரியரிடமே பாடங்கேட்க வேண்டுமென்பதும் நம்சமய ஒழுங்காகும். இவ்வொழுங்கினைப்பாராது தாம் தாம் மனம்போனபடி ஞான நூல்களைப்படித்துவிட்டு சரியை கிரியைகளை இகழ்வது வேதனைக்குரியதாகும். இப்படிக்கற்பவர்கள் உயர்ந்த சாஸ்திரங்களின் சொற்பொருளை அறியலாமேயன்றி அந்நூல்கள் கூறும் உண்மைகளை அனுபவசாத்தியமாக உணர்ந்துமகிழ இயலாது. ஆனல் ஒவ்வொருவரும் தம் தகுதிக்கேற்ப சரியை கிரியை மார்க்கத்தினைச் சாதனைசெய்தாலே நலம் உறலாம்.

இலக்கியச்சுவை, சங்கீத ரசனை ஆகிய நுட்பரசனையே அற்றவர்களாய் உண்பன உடுப்பன காண்பனவாகிய புற இரசனைகளில் இன்பங்காண்பவர் புறவழிபாடுகளான சரியை மார்க்கத்தின் சாதனைக்கே உரியவர்கள் எனலாம்.

சிவசன்னிதானத்தில் நிகழ்த்தப்படுகின்ற உயர்ந்த சரியைத் தொண்டாகிய தோத்திரம் பாடுதல் மாலைகட்டிக்கொடுத்

(5-ம் பக்கம் பார்க்க)

# சபையில் சிந்தியவை

(இ. க ் தசாமி)

அத்தனகல எம். பி. (லக்ஷ்மன் ஜயக்கொடி): எமது 14 இளம் கிரிக்கெட் வீரர்களுக்குச் சர்வதேச போட்டிகளிலும் கிளப் போட்டிகளிலும் ஆடுவதற்கு 25 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது இங்கிலாந்தில்கூட இதுபோல் கட்டுப்பாட்டை மீறிய வீரர்களுக்கு 5 ஆண்டுகளுக்குமட்டுமே தடைவிதிக்கப்பட்டது. கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை விதித்துள்ள இக்கட்டுப்பாட்டை நீக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விளையாட்டு அமைச்சர் (வின்சன்ட் பெரேரா): அந்த வீரர்கள் இவ்விஷயத்தை எனது கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதில் கவனம் செலுத்துவேன்.

பொதுநிர்வாக பிரதி அமைச்சர் (ஹரேந்திர கொரியா): 14 கிரிக்கெட் வீரர்களிம் இங்கிருந்து தென்னுபிரிக்காவுக்குச் சென்று எமது நாட்டைக்காட்டிக் கொடுத்துவிட்டனர். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கட்டுப்பாடுகளையும்மீறித் தமது சுயநலத்திற்காகப்பணம் சம்பாதித்துக் கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் (அனுரா பண்டாரநாயக்கா): தண்டனைவிதிக்கப்பட்டுச்சிறையில் வைக்கப்பட்ட ரோகண விஜய வீரவை மன்னித்து விடுதலை செய்யமுடியுமானுல் இவர்களுக்கு மன்னிப்புவழங்க முடியாதா?

ஹரேந்திர கொரியா: இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

பிரதிக்கல்வி அமைச்சர் (வீரவன்ச சமரவீர): பத்திரிகைகளினுலும், தொலைக்காட்சியினுலும் எமது இளைஞர்களின் மனநிலையே கெட்டுப்போய்விட்டது கலாசாரத்தையே அவர்கள் மதிப்பதில்லை. கெட்டவழியிலேயே இளைஞர்கள் இன்று செல்கின்றனர். பட்டப்பகலில் ஜன நெருக்கடி மிக்க இடத்தில் கொள்ளையடிக்கவும் அவர்கள் துணிந்துவிட்டார்கள். கொலை, கொள்ளை, கற்பழிப்புப் படங்களையும் கதைகளையும் படித்ததன் பலனே இது. எமது இளைஞர்கள் எங்கே செல்கிறுர்கள் என்றே தெரியவில்லை.

சமரவீர: பெரஹராவில் இரவு நேரங்களில் எல்லாம் எமது பெண்கள் 'பாண்ட்' வாத்தியங்களுடன் வீதிகளில் நடனமாடுகின்றனர். எமது கலாசாரம் எங்கே செல்கின்றது?

சமரவீர: பத்திரிகைகளும், ரூபவாஹினியும் எமது குழந்தைகளை மோசமான நிலைக்கு இட்டுச்சென்று கலாசார ரீதியில் அநாதைகளாக்குகின்றன.

கலாசார அமைச்சர் (ஏ. எல். ஹருள்ளே); பௌத்த பிக்குகள் நீதிமன்றங்களில் காலத்தை வீணுக்குவது எல்லோருக்கும் கவலைக்குரிய விடயம் தான் சங்க நீதிமன்ற (சங்காதிகாரண)சட்டத்தை விரைவில் கொண்டுவந்து இந்த நிலையைப்போக்க நடவடிக்கை எடுப்போம். சாதாரணபிரஜை ஒருவருக்கும் பிக்கு ஒருவருக்கும் ஏற்படும் சர்ச்சை எனில் நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டும். பிக்குகளுக்கிடையேயான விவகாரங்களைச்சங்க நீதிமன்றம் விசாரிக்கும்

ஹருள்ளே, கலாச்சார முக்கோணப் பிரதேசத்தைமேலும் விஸ்தரித்து இன்னும்பல இடங்களில் அகழ்வராய்ச்சி வேலைகளை மேற்கொள்ளத் தீர்மானித்து அமைச்சரவையின் அனுமதியும் பெற்றுகிவிட்டது. போதிய அதிகாரிகளும், நிதியும் இல்லாமல் இருப்பதினுலேயே அவ்வேலைகள் தடைபட்டுள்ளன,

ஹருள்ளே: 77-ம் ஆண்டு இந்த அரசு பதவி ஏற்றபின்னர் 150க்கும் அதிகமான அகழ்வராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன, வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலுமே இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## தமிழ்மொழி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழ்மொழி அமுலாக்கத்தை சிங்கள அமைச்சர் ஒருவர் எவ்வாறு நடைமுறைப்படுத்துவார் என நீங்கள் எதிர்பார்க்க முடியும் என ஜனுதிபதியும் கேட்டிருந்தார்.

''தமிழ்மொழி அமுலாக்கம் மட்டுமே பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பணி. ஆனுல் அது அமுலாக்கப்படவில்லை. எதிர்க்கட்சியிலுள்ள சிங்களவராகிய நாமே தமிழ்மொழி அமுலாக்கம் உரியமுறையில் நடைமுறைப்படுத்தாதது குறித்து வேதனைப்படுகிறேம்.

''இந்த நாட்டில் இனவாதததுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தமிழ்மக்கள் பிரனைக்கு சமுகமான இறுதி முடிவு காணவேண்டும் என்பதில் நாம் மிகுந்த அக்கறையுடன் இருக்கிறேம். ஒத்துவழய்ப்புவழங்கவும் தயாராக இருக்கிறேம்.

''அமைச்சர் தமிழரசுக் கட்சியிலும் கூட்டணியிலும் நெருங்கிய உறுப்பினராக இருந்தபோது கட்சியால் இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றி நான் அறிவேன்.

'தமிழர்விடுதலைக்கூட்டணினர் தனதுஅடிப்படை உரிமைகளை அரசியலயிரயத்துக்காக பயன்படுத்துகிறுர்கள். பிரச்னைகளை தமது களமாக்கி அரசியல் நடத்துகிறுர்கள். அதற்கு இடமளிக்காத விதத்தில்அமைச்சர் செயற்படவேண்டும். எவரும் அரசியல் லாபம் பெற அனுமதிக்கக்கூடாது.

''இந்துசமய ஆராய்ச்சி நிலையமொன்று கொள்ளுப்பிட்டியில் அமைக்கப்பட்டது. மாதமொன்றுக்கு பத்தாயிரம் ரூபா வாடகையும் கொடுக்கப்படுகிறது. ஆனுல் இந்த நிலையம் இன்னும் இயங்கவில்லை.

''பிராந்திய அபிவிருத்தி அலுவலக கிளைகள் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டது திருகோணமலை, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய இடங்களிலும் கிளைக காரியாலயங்கள் அமைக்கப்படவேண்டும்.

''பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் 1981ம் ஆண்டுக்கான கணக்கறிக்கைஇதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. பணிப்பாளர்கள் ஒருவரை ஒருவர் மோதிக்கொள்கிறுர்கள்',

(இ-கு)

## நான்கண்ட

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடம் விசாரித்த பொழுது, தான் மலைநாட்டிலிருந்து வந்ததாகவும், ஆழக் கிணறுகளைக் குளத்தின் அலைகரையில் வெட்டினுல் சுமாராகத் தண்ணீர் கிடைக்குமென்றும், அந்த நீரை உபயோகித்து யாழ்ப்பாண முறையில் வெங்காயம், மிளகாய் பயிரிடலாமென்றுர். புதுக்குளத்தில் கூறிய கஷ்டங்களை நிவிர்த்திசெய்ய ஒரு மறுமொழியை உடனே கண்டேன். அதாவது, நெல் வருவாயுடன் வேறு வருவாய் எப்படிக் கிடைக்குமென்று!

(நாளை முடியும்)

## வெள்ளிச்சிந்தனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் ஆகியன செய்யும் பெரும் பாக்கியவான்கள் இருக்க ஒன்றுக்கும் பற்றுத தன்னையும் சிவன் கருணைப்பெருக் கினுலே ஆண்டருளினுர் என்று மணிவாசகப் பெருமான் பாடிய திருப்பள்ளியெழுச்சிப் பாடல் எல்லோரையும் சரியைத் தொண்டே செய்யத் தூண்டும் தன்மையுள்ளது.

''இன்னிசை வீணையர்
யாழினர் ஒருபால்
இருக்கொடுதோத்திரம்
இயம்பினர் ஒருபால்
துன்னியபிணைமலர்க்
கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர்
துவர்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலிகூப்
பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை
சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டிங்
கெழுந்தருளும் எம்பெருமான்
பள்ளி எழுந்தருளாயே,

— மாணிக்கவாசகர்.

— அருளாளன்.

## சட்டமேலவை புதிய உறுப்பினர்கள்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையின்மேலவைக்கு மூன்று புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பிரபல நடிகர் திரு. பி. அங்கமுத்து நலிவுற்ற மக்கள் சார்பில் திரு. மாசிலாமணி, திரு. போலப்பா ஆகியோரே இப்புதியவர்களாவர்.

தமிழ்நாடு ஆளுநகர் திரு. எல். எம். குரானு இப்புதியவர்களின் சத்தியப் பிரமாணங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கான பதவிகளை வழங்கினுர். [கி]

## சின்னமடு மாதிரிக் கிராமம்

[அரியாலை]

ஊர்காவற்றுறைத் தொகுதியில் சரவணை என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் ''சின்னமடு மாதிரி கிராம'' சுய வீடமைப்புத் திட்ட வேலைகளை 1984ம் ஆண்டு தொடர்ந்து செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரும் மகஜரொன்றை அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபைப் பொதுச் செயலாளர், யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

# கிராமிய அபிவிருத்தியில் சனசமூகநிலையங்களின்பங்கு

(புலோலி)

கிராமிய அபிவிருத்தியில் சனமூக நிலையங்கள் முக்கிய இடத்தினைவகிக்கின்றனஎனவே சன சமூக நிலையங்கள் கிராம மக்களின் சமூக பொருளாதார கல்வி விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளில் திட்டமிட்டுச் சிறப்பாக ஈடுபடவேண்டும்''

இவ்வாறு புலோலி இளைஞர் சழகத்தினதும், புற்றளை சன சமூக நிலையத்தினதும் விசேட கூட்டத்தில் உரையாற்றிய யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை புலோலி அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எம், அருளானந்தம் குறிப்பிட்டார். புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் தலைவர் திரு. அ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. அருளானந்தம் குறிப்பிட்டதாவது:

சனசமூக நிலையங்கள் இறப்பாக இயங்குவதன் மூலம் அப்பகுதி கிராமங்கள் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி மேம்பாட்டையும் புத்தகங்கள் பத்திரிகைகளைக் கொண்டுமட்டும் கிராமமக்களைமுன்னேற்ற முடியாது எனவே கல்வி விளையாட்டு கைத்தொழில் துறைகளிலும் ஈடுபடுவதன் மூலமே கிராமத்தின் வளத்தைப் பெருக்கமுடியும்''.

## இலங்கை இளைஞர்களுக்கு நல்ல குணவியல்பு

(திருகோணமலை)

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளில் வாழும் இளைஞர்களிலும் பார்க்க இலங்கை இளைஞர்கள் நல்ல குணவியல்புகள் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

இளைஞர் விவகார. வேலைவாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் திரு. காமினி அத்துக்கோறள கூறியுள்ளார்.

வெளிவாரிப் பட்டப்படிப்புகள் (கலை)
G. A. Q. வகுப்புக்கள்
துரித மீட்டல் 1984 ஏப்பிரல் பரீட்சைக்கு
முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்.
ஆரம்பம்: 24-12-1983
B. A 1984 டிசம்பர்
வகுப்புகள் ஆரம்பம்: 01-01-1984
யாழ் நகரில் கடந்த வருடம்
அதிகமான மாணவர்கள்
சித்தியடைந்த ஒரே நிறுவனம்
விண்ணப்பங்கள் 24-12-83 முதல்
ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு:
JASE றிம்மர் மண்டபம்
21/6, வேம்படி றேட், யாழ்ப்பாணம்.

SHOBA
இதோ! உங்கள் சௌகரியத்திற்கு
L.P. GAS
மற்றும்
பொலித்தீன்
இலோ ரூபா 34/- முதல் 45/- வரை
லொறி, வான்களுக்கு பாவிக்கும் தரமான கன்வஸ்
ரூபா 23/- முதல் 28/- வரை
பொலித்தீன் பைக்கற் செய்யும் இயந்திரம்
ரூபா 300/-ல் இருந்து 500/- வரை
நிலக்கடலை உடைக்கும் இயந்திரம்
ரூபா 3000/-ல் இருந்து 5000/- வரை
R. H. P. றேசர் (BALLBEARINGS)
ரூபா 30/-ல் இருந்து 200/- வரை
மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம், உழவு இயந்திரம், கார், மீன்பிடி இயந்திரம், வள்ளங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான எல்லா அளவுகளிலும் கிடைக்கும்.
மற்றும்
பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் - பென்சில் மற்றும் உபகரணங்கள் ரூபா 1/- இருந்து 35/- வரை, மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
ஒரு முறை விஜயம்செய்யுங்கள்! தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறேம்!!
ஷோபா ஏஜென்சீஸ் லிமிட்.
194, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்

## பாராட்டுவிழா நடத்த ஏற்பாடு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி வாழ் மலையக மக்களின் நல்வாழ்விற்காக பல பணிகளை மேற்கொண்டமைக்காக பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. பி. கணேசபிள்ளை கிளிநொச்சி கிராம சேவையாளர் திரு. தனபாலசிங்கம் ஆகியோருக்கு கிளிநொச்சி பொன்னகர் கிராம மக்கள் பாராட்டுவிழா வொன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. சுப்பிரமணியம், முன்னுள் மாவட்டசபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா உட்பட பல பிரமுகர்களை அழைக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

# "கிராமிய அபிவிருத்தியே அரசின் தலையாய நோக்கம்"

— பிரதமர்

## "தொழிலாளருக்கு உதவுவதில் மகிழ்ச்சி"

— தொண்டா

(கொழும்பு)

"இந்த நாட்டின் சாதாரண தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய விதத்தில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு எனக்குக்கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்வு கொள்கிறேன்; பொதுவாழ்வில் சாதாரண தொழிலாள வர்க்கத்தினருக்காகப் பாடுபட்டு அக்கறையுடன் உழைத்துவரும் எனக்கு இந்த அமைச்சு கிடைத்தது அதிர்ஷ்டமே".

இவ்வாறு கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறினர்.

கொழும்பு கலா பவனத்தில் நடைபெற்ற கைப்பணி அருங்கலைப்பொருட்கள் அன்பளிப்பு பொருட்கள் போட்டி, கண்காட்சி வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு தொண்டமான் மேற்கண்டவாறு கூறினர்.

இலங்கை தேசிய வடிவமைப்பு நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்த மூன்று நாள் வைபவத்தில் முதல் நாளன்று அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எமது நாட்டு மக்களின், குறிப்பாக கிராமிய மக்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட அருங்கலைப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் பெரும் கிராக்கி இருக்கிறது என்பதை இங்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் அப்பொருட்களை வாங்குவதில் கொண்டுள்ள அக்கறை மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

"இப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கென தொழில் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. இத்துறை மூலம் எமது கலை, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியனவும் முன்னேற வாய்ப்புகிட்டுகிறது."

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் கூறியதாவது:

"கிராமிய மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்வதே எமது அரசின், தலையாயநோக்கம். இந்நாட்டின் சனத்தொகையில் 80 வீதமானேர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியில் உச்சகட்டத்தை எம்மால் அடைய முடியும். இங்குள்ள அருங்கலைப்பொருட்கள் மூலம் எமது கலை, கலாச்சாரத்தை உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறிக்கொண்டிருக்கும் கிராமிய மக்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்ய அரசு என்றுமே ஆயத்தமாக இருக்கிறது."


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL
SERVICES
(PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு


கிளிநொச்சிப்பகுதி

## இந்து மன்றங்களை ஒன்றிணைக்க முயற்சி

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து சென்ற இந்துமதத் தூதுக் குழுவொன்று உலக இந்துமகாசபையின் இலங்கைக் கிளைத்தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமியை சந்தித்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் உருத்திரபுரம் காந்திசேவா சங்கப் பிரமுகர் எஸ். கே. வேலாயுதபிள்ளை, கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலய பரிபாலனசபை பொருளார் கே. எஸ். வீரசிங்கம், குருகுல இயக்குனர் சபையாகிய கரைச்சி சைவவித்தியா விருத்திச்சங்க உறுப்பினர்கள் டாக்டர் கே. வி கே திருலோகமூர்த்தி, கே. எஸ். ஆறுமுகம், வி. தாமோதரம்பிள்ளை கிளிநொச்சி சைவ அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த திரு. ரி. எஸ். தர்மலிங்கம், கனகபுரம் இந்து கலாச்சாரசபை செயலாளர் கணேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றினர்கள்.

இச்சந்திப்பில் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள இந்துமன்றங்களை ஒன்றிணைப்பது தொடர்பாகவும், இந்து. சைவ ஆலயங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இச்சந்திப்பில் திரு. யோகேந்திரா துரைச்சாமி உரையாற்றுகையில்: "இந்துக்களாகிய நாம் மற்ற மதத்தவர்கள் புண்படும் விதத்தில் செயற்படக்கூடாதெனவும் அன்பு, அகிம்சை, சத்தியநெறிகளை பேணி வாழ்வதுடன் இந்து மதக்கோட்பாடுகளையும் பின்பற்றி நடக்கவேண்டும்" எனவும் தெரிவித்தார். (க)


# பிலிப்ஸ் வழங்கும் தன்னியக்கச் சுழல் மின் விசிறிகள் 2 உன்னதத் திருப்தி அம்சங்கள் கொண்டவை



1. உட்புறம் சக்தி மிக்கது. சப்தம் அற்றது.

சிறப்பம்சங்கள்:

- நீடித்துழைக்கும் தரமுயர்ந்த பிலிப்ஸ் உறுப்புகள்.
- உச்சச் சக்தி தரும் சப்தமற்ற மோட்டார்.

2. வெளிப்புறம் - கவர்ச்சி மிக்க நவீன தோற்றம்.

- உலோக அலகுகள். (4 அலகுகளுடனும் கிடைக்கும்.)
- வலம், இடமாக 90 பாகைக்கும் மேலாகச் சுழலும்.
- 3 வேகங்கள். 4 அழுத்து விசைகள் மூலம் இயங்கும்.

விலை: ரூ2000/= அமெரிக்க டொலர்: 33

இலங்கையில் பிலிப்ஸ் நிறுவனத்தின் ஏக பிரதிநிதிகள்:

ஹேலீஸ் லிமிட்டெட்.
25, வொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10.
தொலைபேசி: 91181 - 9

காட்சிச்சாலை:
646. காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 86958

மேலும் கிடைக்குமிடம்: தீர்வையற்ற, தரைத் தளக் கடை எண் 2 தீர்வையற்ற வர்த்தக வலயம், கொழும்பு 3.





PHILIPS

பிலிப்ஸ் துணையுடன் அதி சிறந்ததை அளிப்போம்.


## கும்பாபிஷேகம்

[illegible] (புலோலி)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தனபிரதிஷ்டா மகாகும்மாபிஷேகம் சிறப்பாக நடைபெறற்து.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6.02 | 'கிறிஸ்மஸ் கதை' |
| 6.30 | 'எனது பெயர்......' உலக சிறுவர்கள் பற்றிய நிகழ்ச்சி |
| 7.00 | செய்திகள் (தமிழ்) |
| 7.15 | ஆங்கில நிகழ்ச்சி |
| 7.45 | நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 8.15 | செய்திகள் (சிங்களம்) |
| 8.30 | பேட்டி நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9 00 | 'மேரியும் யோசேப்பும்' (ஆங்கிலம்) |
| 9.30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.50 | 'மேரி யோசேப்' (தொடர்ச்சி) |
| 11.50 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## ஸெயில்சிங்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தினர். பாலஸ்தீன மக்களின் பிரச்சினையைத் தீர்க்க திருமதி இந்திரா காந்தி எடுத்துவரும் முயற்சிகளுக்குத் தாம் பூரண ஆதரவளிப்பதாகப் பாஹ்ரெய்ன் தலைவர்கள் இந்திய ஜனாதிபதியிடம் தெரிவித்தனர். [சூ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
குழந்தையும்
தெய்வமும்

ராணி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
அபூர்வ ராகங்கள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றாம் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

சாந்தி (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30
மாதர்கள் பெரிதும்
பாராட்டும் உன்னத
வண்ணச்சித்திரம்!
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
இன்னும் குறிப்பிட்ட
சில தினங்களே
காண்பிக்கப்படும்!

ஹரன் (யாழ் நகர்)
விரைவில் வருகிறது
CHARLES BRONSON
LEE MARVIN in
"Death Hunt"
(Color)
இரண்டு எதிரி குழுவின
ருக்கிடையில் ஏற்படும்
பயங்கர துப்பாக்கிச்
சமரின் முடிவு?

லிடோ (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
22—23-12-83
Peter's Sake

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-சௌகார்ஜானகி
பார் மகளே பார்

Rajah JAFFNA
Last 3 Days
Daily 10-30 2-00 4-30
6-30 and 9-30
Jackie Chan
BATTLE CREEK BRAWL
(Color Scope)
27 முதல்
10-30, 2-30, 6-00
கமலஹாசன் - ரதி
உல்லாசப்பறவைகள்
(புதியபிரதி)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில்
தேன்சிந்தும் அமுத ராக
மாய், காதலின் அமர
காவியமாய் பார்ப்பவ
ரைப் பரவசமூட்டி-
மீண்டும் பார்க்
கத்தூண்டும் - சிந்திக்க
வைக்கும் - அதி உன்னத
காதல் ஓவியமாய் பவனி
வந்த வண்ணத்திரை
விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 8-ம் திகதி
வெள்ளிக்கிழமை
23-12-83

மேடம்:- வாழ்வுப் பாதையில் நல்ல திருப்பங்கள் தென்படும். தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். சிலருக்கு அரசினரின் விருதும், பயணங்களும் உண்டு.

இடபம்:- பல வழிகளாலும் பணவரவிற்கு இடமுண்டு. பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம். வரவேற்கவேண்டிய நாள்.

மிதுனம்:- ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு வேதனையைத்தரும். குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும். தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்:- அதிக ஆசையினால் அவதிப்படுவீர்கள். மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவருடன் கைகலப்புகளும் இடம்பெறலாம். உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

சிம்மம்:- குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். வெளியிடத்துச் செய்திகிடைக்கும் பணவரவிற்கும் இடமுண்டு. உடல் நலத்திலும் குறிப்பிடத்தக்க சுகம் உண்டு.

கன்னி:- அன்னியர் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் நிகழலாம் தொழில் தடைகள் உண்டு. சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

துலாம்:- வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வாகனவிருத்திக்கு இடமுண்டு. நீர்ப்பாசனப்பகுதியில் கடமையாற்றுவோருக்குச் சிறப்பான தினம்.

விருச்சிகம்:- மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். நீண்ட நாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர். கணவன் மனைவி உறவு நெருக்கமாகும்.

தனுசு:- பணம் பல வழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவுபார்ப்பர். எதிலும் அவதானம் நன்று.

மகரம்:- களஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். காதலர்களுக்குக் கலகலப்பாக இருக்கும். புத்திர வழியாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. சுப தினம்.

கும்பம்:- தொல்லைகள் தலைதூக்கும். தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்கள் காலைவாரிவிடலாம். அவசரமுடிவைத் தவிர்க்கவும். அமைதி வேண்டும்.

மீனம்:- இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதா வழி ஆதரவு தாராளமாக உண்டு. செய்தொழிலிலும் சிறப்புக்கு இடமுண்டு. பெரியோர் உதவிக்கு வருவார்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

மனோகரா (யாழ். நகர்)
10-30 a.m. 2-15,
4-45, 7-15 p.m.
Bill Murray in
Meat Balls
(Comedy Film-Color)

Regal (Jaffna)
Daily 10-30 a.m. 2-30
4-45 and 7-00 p.m.
Ringo Star in
CAVE Man
(Action-Color-Thrill
A Family Entertainment

# 'குழந்தை உள்ளங்களை கெடுக்கும் ரூபவாஹினி!'

## பிரதி கல்வி அமைச்சர் சாடுகிறார்

(இ. கந்தசாமி)

"ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவையில், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவற்றைத் தூண்டும் படங்களை ஒளிபரப்புகிறார்கள். இப்படி இந்தத் தொலைக்காட்சிச் சேவை இயங்குவதைவிட மூடிவிடலாம்" என்று நேற்று பாராளுமன்றத்தில். பிரதி கல்வி அமைச்சர் திரு. வீரவன்சா சமரவீர கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"கொலையும், கொள்ளையும், கற்பழிப்பும் போன்ற பஞ்சமா பாதகங்களைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கிறது ரூபவாஹினி. குழந்தைகளின் மனங்களில் தீய எண்ணங்களை வளர்க்கிறது தவறாக வழி நடத்தப்படுகிறார்கள் பத்திரிகைகளில் மனதைக் கெடுக்கும் படக்கதைகளும், கொலை, கொள்ளைக் கதைகளும், நிர்வாணப்படங்களும் வெளிவருகின்றன. பெண்களின் அங்கங்களை அப்பட்டமாகக் காட்டக்கூடிய படங்களை வெளியிடுவது இளம் உள்ளங்களைக் கெடுத்துவிடும். இப்படியான கதைகளையும், படங்களையும் விற்பனை கருதி வெளியிடும் பத்திரிகை ஆசிரியர்கள் தங்களது மனைவி, பிள்ளைகளது நிர்வாணப் படங்களை பத்திரிகைகளிலும், 84-ஆம் ஆண்டு கலண்டரிலும் வெளியிடட்டும்.

கலாசார அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருள்ளேபேசுகையில் "நாடகக்கலையை வளர்ப்பதற்கு சகல உதவிகளையும் வழங்க அரசு தயாராக இருக்கிறது" என்றார்.

# 1984ல் பென்ஷன் வழங்கும் திகதிகள்!

(கொழும்பு)

1984-ஆம் ஆண்டு ஓய்வூதியம் (பென்ஷன்) பின்வரும் திகதிகளில் வழங்கப்படும்.

ஜனவரி 12: பெப்ரவரி 15; மார்ச் 14; ஏப்ரல் 5; மே 10; ஜூன் 7; ஜூலை 11; ஆகஸ்ட் 15; செப்ரெம்பர் 13; அக்டோபர் 11; நவம்பர் 15; டிசம்பர் 13. (சூ)

## அடையாள அட்டை

யாழ். வர்த்தக வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் கே. சுப்பிரமணியம் என்பவர் இராசரத்தினம் மகாதேவன் என்பவருடைய அடையாள அட்டையைக் கண்டு எடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## இடம்பெயர்ந்தபல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் இன்று கூடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் பொதுக் கூட்டம் இன்றுவெள்ளிக்கிழமை காலை யாழ். பல்கலைக்கழகத்தில்நடைபெறவுள்ளது.

பேராதனை, கொழும்பு, மொறட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்களும், இந்தப் பல்கலைக்கழகங்களுக்குப்புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளனர். (மா)

## ஹாட்லி ஆசிரியர் வென்றனர்

[புலோலி]

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் ஹாட்லிக் கல்லூரி 3-0 கோல்களால் வெற்றியீட்டியது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப் போட்டியின் நடுவராக திரு. டி. எம். வேதாபரணம் கடமையாற்றினார். (கு)

## எரிபொருள் நிலையத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியில் உள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்தில் புகுந்த இனந்தெரியாத இரு நபர்கள் துப்பாக்கி முனையில் இரண்டாயிரம் ரூபா கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்களே இக்கொள்ளையை நடாத்தினராம்.

இக்கொள்ளை நடைபெற்றது சம்பந்தமாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## "பேச்சு வேண்டாம் செயலில் காட்டுவோம்"

(திருகோணமலை)

"பேச்சிலே நாட்டம் கொள்ளாது செயலிலே ஈடுபாடு காட்டவேண்டும்."

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிராமோதய சபைத் தலைவர்களின் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு திருகோணமலை நகரமண்டபத்தில் நடைபெற்றது.

வியாபாரிகளுக்கு சலுகை
லீலா, மெய்கண்டான் மற்றும் கலண்டர்கள்,
டயறிகள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்பு விலைகளுக்கு கமிஷன் வழங்கப்படும்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
04, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
போன் : 23631.

நத்தார் - புதுவருட மலிவு விற்பனை
10 % விசேட கழிவு
★ ஜில் ஈகிள் ★ ஜில் ஸ்கைரெக்ஸ்
★ ஜில் மாஸ்டர் ★ Super Heather
★ Kraig Noble Skirts ★ றெென்சன் சேட்ஸ்
விலை ரூபா 200/- முதல் 550/- வரை
லிங்கம் சில்க் ஹவுஸ்
21, மேல் மாடி, நவீனசந்தை யாழ்ப்பாணம்.
18, நவீன சந்தை - யாழ்ப்பாணம்.

# "என்னை இழுத்து போகும்போது எதிர்ப்பைத் தெரிவித்தேன்"

## வல்வை பெண் கடத்தல் வழக்கில் இளம் பெண் சாட்சியம்

(புலோலி

என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோகும்போது நான் எனது எதிர்ப்பைத் தெரிவித்தேன். நான் எதிரியின் சார்பில் சேர்ந்து போகவில்லை''

இவ்வாறு வல்வெட்டித்துறை பெண்கடத்தல் வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கடத்திச்செல்லப்பட்ட இளம் பெண் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை உலகுடைய பிள்ளையார் கோவில் ஒழுங்கையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை பாலசுப்பிரமணியம் ரவிசங்கரும் மற்றும் எட்டுப்பேரும் கடத்திச் சென்றார்கள் என்று குற்றஞ் சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இப்பெண்கடத்தல் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதவான் திரு கே கணபதிப்பிள்ளை முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சட்டத்தரணி பாலகிருஸ்ணனால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது இளம்பெண் குறிப்பிட்டதாவது:

''எனக்கு நடந்த சம்பவங்கள் எல்லாம் ஞாபகமிருக்கின்றது. 24-8-81 இரவு 8-30 மணியளவிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. நான் வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். என்னை எனது வீட்டிலிருந்து இழுத்துக்கொண்டு போனதாகச் சொல்லியுள்ளேன் என்னை அப்படி இழுத்துக்கொண்டு போகும்போது நான் எனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றேன். இந்தச் சம்பவம் 15 நிமிடங்களுக்குள் நடந்திருக்கும் என நான் சொல்கிறேன். அதிலும் குறைவாகவும் இருக்கும். எதிரியின் சார்பில் நான் சேர்ந்து போனபடியால்தான் 15 நிமிடங்களுக்குள் என்னால் போகமுடிந்தது என்பதைநான் மறுக்கிறேன்.

எனது வீடு மிகவும் சனநெருக்கமுள்ள இடத்தில்தான் இருக்கின்றது. இந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் நான்குளறிக் கத்தியபடியாலும் பேரன், பேர்த்தி ஆட்கள் சத்தம்போட்டபடியாலும் 100, 150 பேர் வரை வந்திருப்பார்கள் என்று சொல்வதை நான் மறுக்கிறேன்.

''சம்பவம் நடந்த போது நான் முதன் முதலாக 8-ம் எதிரி விஜயகுமார் குசினிக்குள்ளால் வெளியில் வரும்போது வீட்டில் உள்ளவர்களுக்கு அடித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். கூட்டமாக நின்றார்கள். யார் அடித்தார்கள் என்று தெரியாது. 20 பேர் வரை கூட்டமாக நின்றார்கள். எனது வீட்டைச் சேர்ந்த 8 பேரும் அதில் நின்றார்கள் வந்தவர்களில் ஏழு பேரைத்தான் என்னால் காட்ட முடியும்.

''விஜயகுமார் அங்கு நின்றவர்களுக்கு அடித்தாரோ தவிர எனக்கு வீட்டில் ஒன்றும் செய்யவில்லை. ஒழுங்கையால் இழுத்துக் கொண்டு போகும் போது நான் சத்தம் போட்ட போது அயலவர்கள் வந்து பிடித்தார்கள் குரு அப்பாவும் வந்து பிடித்தார். அப்போது எனது கையை இழுத்து விட்டு விஜயகுமார் குரு அப்பாவுக்கு அடித்தார் என்னைப் பிரேம்ராஜ் இழுத்துக் கொண்டுவந்தார். என்னை இழுத்து விட்டு விஜயகுமார் குரு அப்பாவுக்கு அடித்தார். எனது மற்றக்கையை பிரேம்ராஜ்பிடித்தார்.

' நான் போகும் போது சத்தம் போட்டுக் கொண்டுதான் போனேன், ஆட்களைக் கண்டதும் கூடுதலாகச்சத்தம் போட்டேன்.

என்னைப் பிரேம் ராஜ் இழுத்துக்கொண்டு போகும் போது 8ம் எதிரி விஜயகுமார் என்னைத் தொடவில்லை என்று நான் சொல்லியுள்ளேன். 8-ம் எதிரியை இவ்வழக்கில் சோடித்திருக்கிறோம் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். நடந்ததைத்தான் சொல்கிறேன். (கு)

---

# மரண அறிவித்தல்

## தே. கணரூபன்

அளவெட்டியைச் சேர்ந்த செல்வன். தே. கணரூபன் நேற்றுக் காலமானார்.

அன்னார் ஏழாலை அரசினர் மத்திய மருந்தக அதிபரும், அளவெட்டி வாசகரும் ஆன Dr. T. தேவதாசன் தம்பதிகளின் அருமைப் புதல்வனும், அருணோதயக் கல்லூரி மாணவி தர்ஷனியின் அன்புச் சகோதரருமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-12-83 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

(10723) டச்சு ரோட்-அளவெட்டி.

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி இராசரத்தினம்

(அப்பு மாஸ்ரர்)

தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்தவரும், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியருமாகிய சின்னத்தம்பி இராசரத்தினம் 21-12-83 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியை ஞானரத்தினத்தின் அன்புக் கணவரும், மனோகரன் (அவுஸ்திரேலியா). சிறீதரன், இராசமோகன், இராசகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், மல்லிகாவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி இராசம்மா முத்தையா, திருமதி கனகம்மா இரத்தினசிங்கம், திரு. கனகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர். 25-12-83 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தகனக் கிரியைக்காக சொந்தியால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 10724

---

# மரண அறிவித்தல்

## திரு. தம்பையா சின்னத்தம்பி

''வளர்மதி வாசா'' கோவில் தெரு, கோப்பாய் தெற்கைச் சேர்ந்த தம்பையா சின்னத்தம்பி காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் ''மதராஸ் ஜுவலறி''யின் உரிமையாளர் இராசையா, மயில்வாகனம் (சின்னராசா), பாக்கியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பிராசா (இளைப்பாறிய பிஸ்கால் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்). மகேஸ்வரி (கொக்குவில்), புவனேஸ்வரி ஆகியோரின் இனிய மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக அன்னாரது இல்லத்திலிருந்து 23-12-83 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்: சி. இராசையா
''மதராஸ் ஜுவலறி மாட்''
264, கஸ்தூரியார் வீதி-யாழ்ப்பாணம்.

கோவில் தெரு,
கோப்பாய் தெற்கு-கோப்பாய். 10725

---

### கூட்டணி

(1-ம் பக்கத்தொடர்ச்சி

கூட்டணியின் பொதுச்சபை ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இலங்கையில் கூடும்போது, சர்வகட்சி மாநாட்டு அழைப்பு மற்றும் மகாநாட்டில் சமர்ப்பிக்க வேண்டிய தீர்மானங்கள் குறித்து முடிவு செய்யப்படவிருக்கிறது.

### 'நவம்' திரும்பினார்

சாவகச்சேரி முன்னாள் எம். பி. திரு. வி.என். நவரத்தினம் நேற்று கொழும்பு திரும்பினார்.

கூட்டணியின் முக்கிய தலைவர்கள் சிலர் ஜனவரி மாதம் மூன்றாம்திகதி தாயகம் திரும்புவார்கள் என்று சென்னையிலிருந்து நேற்று கிடைத்த தகவல்கள் ஊர்ஜிதம் செய்தன.

நாளை சென்னையில் நடைபெறும் கூட்டணியின் உயர்மட்ட அரசியல் குழுக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் பின்னர் பொதுச்சபைக்கும் கொண்டுவரப்படும் என்றும் பொதுச்சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானங்களின் அடிப்படையிலேதான் சர்வகட்சி மகாநாட்டில் யோசனைகளை கூட்டணி சமர்ப்பிக்கும் என்றும் தெரியவருகிறது.

---

### யாழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புல்லுக்குளம் நிரம்பி முனீஸ்வரன் வீதிக்கு மேலால் 2 அடிக்கு வெள்ளம் நிற்கிறது அங்குள்ள விற்பனைத் திணைக்கள கிளையை வெள்ளம் சூழ்ந்துவிட்டது. யாழ். நகரில் பல இடங்களில் வீதிக்கு மேலால் வெள்ளம் பாய்கிறது

செம்மணி ஒரே வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறது. செம்மணி மயானம் நான்கு பக்கமும் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது

நாவற்குளி அணைக்கட்டை மேவி வெள்ளம் கடலுக்குள் பாய்கிறது. அணைக்கட்டின் சகல கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. அப் பகுதியிலுள்ள சில தொழிற்சாலைகளை சுற்றிவெள்ளம் சூழ்ந்துள்ளது.

செம்மணி, முத்திரைச்சந்தி வீதிக்கு மேலால் வெள்ளம் பாய்கிறது. லொறி ஒன்று பாதை தெரியாமல் சென்று செம்மணியில் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. மற்றொரு லொறி நுணுவிலில் பாதையை விட்டு விலகிச்சென்றுள்ளது.

கைதடி வயோதிபர் இல்லம், கோயி பகுதியெல்லாம் வெள்ளம் சூழ்ந்துள்ளது. கைதடி அகதிமுகாம் மட்டும் பாதுகாப்பாக இருக்கிறது. முகாமிற்கு முன்னால் அடிக்கப்பட்டுள்ள கூடாரங்களும் பாதிக்கப்படவில்லை. (க)

---

## பாண்டியன்குளம் உதவி அரச அதிபர் பதவி ஏற்றார்

[யாழ்ப்பாணம்]

பிரபல எழுத்தாளரான திரு. க. குணராசா [செங்கை ஆழியான்] முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு (பாண்டியன்குளம்] உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்றுள்ளார்.

---

### புயல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காற்று வீசும் அபாயம் இருப்பதால், மீனவர்களை கடலுக்குச் செல்லவேண்டாமென்று தமிழ்நாடு அரசு எச்சரித்துள்ளது. (வெ)

---

## தமிழ் மக்கள் உரிமைபெற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''எனது அமைச்சு பல சூழ்நிலைகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது. சரியாக இயங்க முடியாத அளவுக்கு பிரச்னைகள் இருந்தன எனினும் பொறுப்புணர்ச்சியுடன் இயங்கிவருகிறேன்.

' அமைச்சின் கிளைக்காரியாலயங்கள் ஜனவரி முதல் இயங்கும் மற்ற இடங்களில் கிளைகள் அமைக்கப்படும். தமிழ்மொழி அமுலாக்கலை நாம் நினைத்தவாறு துரிதகதியில் செய்துவிட முடியாது. மெதுவாகத்தான் செய்யமுடியும்.

''தமிழ்மொழி அமுலாக்கலுக்கான உபகுழு நியமிக்கப்பட்டு அதுபற்றி நடவடிக்கை எடுத்துவருகிறது. துரிதகதியில் மேற்கொள்ள விரும்புபவர்களில் நானும் ஒருவன். தமிழர்கள் மத்தியிலுள்ள பெருங்குறைகளை நிவர்த்திக்க விரும்புபவன் நான்.

''இந்து கலாசார நிலையத்துக்கு ஊழியர்களும் நியமிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படவிருந்த நேரத்தில் ஜூலைக்கலவரம் வந்துவிட்டதால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

''இந்து-பௌத்த மக்கள் தொடர்பு பல்லாண்டு காலமாக இருந்துவருகிறது. அசோகமன்னன் இந்து சமயத்தைச் சேர்ந்தவன். கலிங்கப் போரில் கொன்று குவிக்கப்பட்ட பிணங்களைப் பார்த்து சமாதானத்தை நாடி பௌத்த மதத்தை நாடினான். கடல் கடந்த நாடுகள் எல்லாம் பௌத்தத்தைப் பரப்பினான்.

''புத்தர்கூட ஒரு இந்து. அவர் பிறந்தது இந்து ராச்சியமான நேபாளத்தில்தான் பௌத்தமும் இந்தும் ஒன்றையொன்று தழுவிய வெவ்வேறு மதங்களாகும்.

''பௌத்த சங்க இலக்கியங்கள் குண்டலகேசி, மணிமேகலை, சிலப்பதிகாரம் என்பன தமிழில்உள்ளன ஏராளமானபெயர்களிலும் ஒற்றுமை உண்டு. தமிழில் நமஸ்காரம் என்பது சிங்களத்தில் நமஸ்கார என்றுள்ளது. அதேபோல மஸ்யம் என்பது புஸ்ய என்றும் புல என்பது மலர என்றும் விவாதம்-விவாதய, மங்களம்-மங்கள, என்று ஒற்றுமைகள் உண்டு.

வடக்கு கிழக்கில் ஏராளமான நடவடிக்கைகளுக்குப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். மட்டக்களப்பில் வலையிறவுப் பாலம் அடுத்த ஆண்டு ஏப்ரலில் போக்குவரத்துக்குத் திறக்கப்படும் மண்முனையில் பாலம் அமைப்பதற்கான அவசியத்தை கடந்த 50 ஆண்டுகளாக பட்டிருப்பு பிரதிநிதிகள் கோரிக்கை விட்டிருந்தார்கள். இந்தப் பாலவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இரண்டு ஆண்டுகளில் பூர்த்தியாகிவிடும்.

''யாழ்ப்பாண மார்பு நோயாளர்கள் பிரச்னையைத் தீர்க்க நவீன இயந்திரம் வாங்கப் பணம் ஒதுக்கியுள்ளோம்.

'எமது அமைச்சு சிறிய அமைச்சு. வீண் விரையங்கள் தவிர்க்கப்படும். பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு ஆலோசனை கூற இந்திய நிபுணர் திரு. சம்பந்தம் இன்னும் ஆறு ஆண்டுகள் இங்கே இருப்பார். அவருக்கு ஐ. நா. சபையே சம்பளம் கொடுக்கிறது. பனம் பொருள் ஆராய்ச்சிக்காக அமெரிக்கா போக இருந்தவரை கஷ்டப்பட்டு அழைத்திருக்கிறோம்.

''சமரசம் நிலவவும் தமிழ் மக்களின் சகல உரிமையும் வழங்கப்படும் ஆண்டாகவும் 84 மலரவேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள். ஜூலை கலவரத்தின் வடு, வசையை மாற்றக்கூடிய ஆண்டாக அது மலரவேண்டும்.

''ஜூலைக் கலவரத்தில் இழவு வீடாகக் காட்சியளித்த இந்த நாட்டின் பயங்கரத்தை நமது உள்ளத்திலிருந்து அகற்ற முடியாத நிலையில் இருக்கிறோம். மீண்டும் இது நடைபெறாமல் இருக்கச் சகல மக்களும் உறுதிபூணவேண்டும்.'' (கு)

---

# மரண அறிவித்தல்

## சின்னப்பு வல்லிபுரம்

(இளைப்பாறிய ஓவசியர்)

அளவெட்டி மாவலியைச் சேர்ந்த சின்னப்பு வல்லிபுரம் 22-12-83ல் அமரரானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும். தோழர் வி பொன்னம்பலம், டாக்டர் மாசிலாமணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். இச்செய்தியை உற்றார் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

10726

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்; [illegible] 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது; Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number R 100236/81. Eelanadu- P. O. Box, 49, Telephone, 22389 — 24126.